# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

.................

**வழக்கு எண்.NC1920/F/2019 (SA1607/F/2019)**

திரு கு. ஸ்ரீனிவாசன் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தனி வட்டாட்சியர் (நில எடுப்பு),
பெங்களூர் சென்னை துரித சாலைத்திட்டம்,
அலகு-4, 15B, விசாலாட்சி நகர்,
செவிலிமேடு,
காஞ்சிபுரம் - 631 502. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 08.10.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 20.11.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 18.02.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 24.06.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 14.08.2019 |

******

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 24.06.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலரை விடுபட்ட இனங்களுக்கான முழுமையான தகவல்களை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் தகவல்

வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் மனுதாரர் திரு கு. ஸ்ரீனிவாசன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), பெங்களூர் சென்னை துரித சாலை திட்டம், விசாலாட்சி நகர், செவிலி மேடு, காஞ்சிபுரம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 08.10.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், மேல்முறையீட்டாளர் 7 தேதிகளில் மனுக்கள் மற்றும் நினைவூட்டு மனுக்களை தனி வட்டாட்சியர்(நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலைகள், காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பியதாகவும், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை 19 இனங்களில் வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தனி வட்டாட்சியர் நிலஎடுப்பு அலுவலகம் அலகு-IV, தேசிய நெடுஞ்சாலைகள், பெங்களூர் சென்னை விரைவு சாலைகள், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள், செவிலி மேடு, காஞ்சிபுரம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. 10.11.2018 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்க மறுத்துள்ளதாகவும், தான் கோரிய தகவல்களை அளிக்கவும் கேட்டு, 20.11.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். 20.12.2018 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டாளர் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், முழுமையான சரியான தகவல் வழங்க ஆணையிடவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 18.02.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 24.06.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA1607/F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 14.08.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், தான் கோரிய தகவல்களில் இனம் 1,2,5,8,9,10,13 மற்றும் 17 ஆகிய இனங்களுக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்றும், மீதமுள்ள தகவல்களை பெற்று வழங்க ஆணையிடவும் கேட்டுக்கொண்டார்.

5. விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களில் விடுபட்ட 1,2,5,8,9,10,13 மற்றும் 17 இனங்களுக்கான தகவல்களை ந.க. எண் 16/2018/தஉச/பெ.செ.வி நாள் 09.11.2020 கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை Whatsapp செயலி மூலம் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

6. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு வழங்குகிறது:

- **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 08.10.2018 தேதியிட்ட மனுவில் கோரிய விடுபட்ட 1,2,5,8,9,10,13 மற்றும் 17 இனங்களுக்கான முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு முன்னறிவிப்பு செய்து வேலை நாட்களில் நேரில் வந்து பார்வையிட அனுமதிக்குமாறும், பார்வையிட்ட பின் மேல்முறையீட்டாளர் கோரும் ஆவண நகல்களை சான்றிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 7(6)-ன்படி இலவசமாக வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் ஆணையம் உத்தரவிடுகின்றது.**

- **மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் பதிவுத் தபால் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.NC1920/F/2019 (SA1607/F/2019)</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தனி வட்டாட்சியர் (நில எடுப்பு),
பெங்களூர் சென்னை துரித சாலைத்திட்டம்,
அலகு-4, 15B, விசாலாட்சி நகர்,
செவிலிமேடு,
காஞ்சிபுரம் - 631 502.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>

திரு கு. ஸ்ரீனிவாசன்,
த/பெ. கே.குப்புசாமி நாயுடு,
எண்.1/203, கண்ணதாசன் 4வது தெரு,
NH-III, மறைமலை நகர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 603 209.

**Copy to: Judgement File.**

**Spare/JE/PA 19.11.2020**